இந்த உரையிலே கிராமப்பணிகள் பற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது. கிராமப் புறங்களில் ரோடு வசதி சரியாக இல்லை. பஞ்சாயத்து ஏரியாவில், ரோடுகள் போட பஞ்சாயத்துக்கு வசதி இல்லை. விவசாயப் பொருள்களைக் கொண்டு செல்ல, வாகன வசதி களும் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, நிதி வசதியில்லாத நிலையில் பஞ்சாயத்துக்களும் இருப்பதால், அந்த ரோடுகளை சர்க்காரிலேயே மராமத்து இலாகாவிலே எடுத்துச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நீலகிரி ஜில்லாவைப் பொறுத்தவரையில், மற்ற ஜில்லாக்கள்போல் இல்லாமல், மலைகளாக இருப்பதால், சாதாரணமாக ஒரு ரோட்டுக்குக் கொடுப்பதைவிட இரண்டு மடங்கு நீலகிரிக்குக் கொடுக்க வேண்டும்.

கடைசியாக, அரிஜன மக்களுக்கு தொகைகள் ஒதுக்கி யிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அரிஜனங் களுடைய ஜனத்தொகை அடிப்படையில் அது போதாது. அரிஜனங்களுக்கு நிலம், வீடு கொடுப்பதுபற்றி தனிக் கவனம் செலுத்த வேண்டும். எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில், வீடு நிலம் கொடுக்க வசதிகள் குறைவாக இருக்கிறது. கேட்டால் தடை உத்தரவு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஏற்கனவே, பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பரிசீலனையை உடனடியாக செய்து முடிந்து மக்களுக்கு வீடு, நிலம் கொடுக்க தக்க வழியில் ஏற்பாடுகள் செய்யப் படவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசிகளைப் பொறுத்தவரையில், எங்கள் பகுதியில் அரிசி விளைவு மிகக் குறைவு. கூடலூர் பகுதியில்தான் ஒரு குறிப்பிட்ட இடங்களில் விளையும். மற்றப் பகுதிகளுக்கு வேறு வேறு ஜில்லாக் களிலிருந்துதான் வரவேண்டும். விலை அதிகமாக இருப்பதால், எங்கள் பகுதியில் 'பேர் ப்ரைஸ் ஷாப்'கள் அமைத்து, மக்களுக்கு அரிசி முதலியவற்றை வினியோகம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இத்தோடு என் உரையை முடிக்கிறேன். ஆனால், போதிய நேரம் இல்லாததால் என் கருத்துக்களை பூராவும் சொல்ல முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று, நாளைக்காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

5. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

22. Notification issued with G.O. Ms. No. 15, Excise and Prohibition, dated the 17th August 1971 in regard to certain amendments to the Tamil Nadu Liquor (Licence and Permit) Rules, 1960. [Laid on the Table of the House under section 54 (3) of the Tamil Nadu Prohibition Act, 1937 (Tamil Nadu Act X of 1937).]

23. Notification issued with G.O. Ms. No. 2380, Home, dated the 30th August 1971 in regard to an amendment to rule 209 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

B. Reports, Notifications and Other Papers

26. Erratum issued with Roc. No. 164237/69, dated the 25th February 1970 to the notification published on page 420 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 17th December 1969, relating to bifurcation of Madampatti Town Panchayat.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS